செய்தி வெளியீடு எண்: 607 நாள்:19.09.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (19.9.2019) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் சென்னை, மைலாப்பூர் பாபநாசம் சிவன் சாலையில் 37 கோடியே 94 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 31 கோடியே 55 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 162 காவலர் குடியிருப்புகள், 3 காவல் நிலையங்கள், 2 காவல்துறை இதர கட்டடங்கள், 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 13 குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, மைலாப்பூர் பாபநாசம் சிவன் சாலையில் 37 கோடியே 94 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 காவலர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் 1 கோடியே 94 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 காவலர் குடியிருப்புகள், இராயபுரத்தில் 3 கோடியே 88 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 28 காவலர் குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 9–ஆம் அணிக்காக 11 கோடியே 7 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 118 காவலர் குடியிருப்புகள்;

சென்னை – கண்ணகி நகர், காஞ்சிபுரம் மாவட்டம் – மாங்காடு மற்றும் கானத்தூர் ஆகிய இடங்களில் 3 கோடியே 18 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 காவல் நிலையங்கள்;

சென்னை, அசோக் நகர், காவல் பயிற்சி பள்ளியில் 5 கோடியே 67 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்ட அரங்கம்; விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஆயுதப்படை வளாகத்தில் 2 கோடியே 27 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆயுதக்கிடங்கு;

திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி மற்றும் வேலூர் மாவட்டம்– அரக்கோணத்தில் 1 கோடியே 78 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள்;

வேலூர் மாவட்டம் – ஆலங்காயத்தில் 1 கோடியே 72 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 13 குடியிருப்புகள்;

என மொத்தம், 69 கோடியே 49 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (குரூப் – 1) மூலமாக தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் மாவட்ட அலுவலர் பணியிடங்களுக்கு

தெரிவு செய்யப்பட்ட 8 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

சீன நாட்டின் செங்டுவில் 8.8.2019 முதல் 18.8.2019 வரை நடைபெற்ற உலக காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறை விளையாட்டுகள் – 2019 போட்டியில் 77 நாடுகளைச் சேர்ந்த காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் கலந்து கொண்டனர். இப்போட்டியில் தமிழ்நாடு காவல்துறையிலிருந்து பங்கேற்று 9 தங்கப் பதக்கங்கள், 16 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 7 வெண்கலப் பதக்கங்கள் வென்ற காவல்துறை ஆய்வாளர் திருமதி பி. பிரான்சிஸ் மேரி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, தலைமை காவலர் திரு. கே. பாலு, முதல் நிலை காவலர்கள் திருமதி டி. தமிழரசி, திருமதி எம்.எஸ். கிருஷ்ண ரேகா மற்றும் திரு. அதிஸ்டம், காவலர்கள் செல்வி பிரமிளா, திருமதி உமா மகேஸ்வரி மற்றும் திரு. எம். தங்கவசந்த் ஆகிய 9 காவல்துறை வீரர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று சந்தித்து, பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் முனைவர் செ.கி. காந்திராஜன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., ஆயுதப்படை காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம.நா.மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 19.9.2019**